செ.வெ.எண்.350 நாள்.01.06.2018

**திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் வட்டம் உவரி கப்பல் மாதா ஆலயம், ஆத்தாங்கரைபள்ளிவாசல் தர்கா, விஜயாபதி விசுவாமித்திரர் ஆலயம் ஆகிய திருத்தலங்களை இணைத்து முக்கோண ஆன்மீக சுற்றுலாத்தளமாக மேம்படுத்துதல் மற்றும் தெற்குகள்ளிகுளம் பனிமயமாதா ஆலயம் ஆகிய பகுதிகளில் அடிப்படை வசதிகள் சுற்றுலாத் துறையின் மூலம் சுமார் ரூ.2 கோடி மதிப்பில் தொடங்குவதற்கான பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஷில்பா பிரபாகர் சதீஷ்,இ.ஆ.ப., அவர்கள் நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டார்.**

-------

திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் வட்டம் உவரி கப்பல் மாதா ஆலயம், ஆத்தாங்கரைபள்ளிவாசல் தர்கா, விஜயாபதி விசுவாமித்திரர் ஆலயம் ஆகிய திருத்தலங்களை முக்கோண ஆன்மீக சுற்றுலாத்தளமாக மேம்படுத்துதல் மற்றும் தெற்குகள்ளிகுளம் பனிமயமாதா ஆலயம் ஆகிய பகுதிகளில் அடிப்படை வசதிகள் சுற்றுலாத் துறையின் மேம்பாட்டு நிதி மூலம் சுமார் ரூ.2 கோடி மதிப்பில் தொடங்குவதற்கான பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஷில்பா பிரபாகர் சதீஷ்,இ.ஆ.ப., அவர்கள் இன்று (01.06.2018) நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டார்.

பின்னர், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது–

திருநெல்வேலி மாவட்டம், உவரி செல்வமாதா ஆலயம் திருவம்பலபுரம் ஆற்றாங்கரை பள்ளிவாசல் ஷேக்முகமது செய்யது அலி பாத்திமா பள்ளிவாசல், விஜயாபதி விசுவாமித்திரர் ஆலயம் ஆகிய திருத்தலங்களை இணைத்து முக்கோண ஆன்மீக சுற்றுலாத்தளமாக மாற்றிட சுற்றுலாத் துறையின் மூலம் அடிப்படை வசதிகள் மேம்படுத்திடும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சுற்றுலாத் துறையின் மூலம் ஆற்றாங்கரை பள்ளிவாசல் தர்காஅருகில் பெண்கள் சுகாதார வளாகம் அமைக்க ரூ.6 இலட்சம் மதிப்பிலும், பயணிகள் காத்திருப்பு கூடம் (ஓய்வுக் கூடம்) ரூ.10 இலட்சம் மதிப்பிலும், அடிப்படை வசதிகள் மேற்கொள்வதற்கு ரூ.16 இலட்சம் மதிப்பிலான பணிகள் நடைபெறவுள்ளது.

உவரி கப்பல் மாதா ஆலயம் அருகில் பெண்கள் மற்றும் ஆண்கள் சுகாதார வளாகம் அமைக்க ரூ.12.50 இலட்சம் மதிப்பிலும், பயணிகள் காத்திருப்பு கூடம் (ஓய்வுக் கூடம்) ரூ.10 இலட்சம் மதிப்பிலும், ஆழ்குழாய் கிணறு அமைத்து புதிய தரை மட்ட நீர்த்தேக்க தொட்டி அமைத்து தண்ணீர் வசதி செய்திட ரூ.14 இலட்சம் மதிப்பிலும், அடிப்படை வசதிகள் மேற்கொள்வதற்கு ரூ.36.50 இலட்சம் மதிப்பிலான பணிகள் நடைபெறவுள்ளது.

விஜயாபதி விசுவாமித்திரர் ஆலயம் அருகில் பெண்கள் மற்றும் ஆண்கள் சுகாதார வளாகம் அமைக்க ரூ.12.50 இலட்சம் மதிப்பிலும், ஆழ்குழாய் கிணறு அமைத்து புதிய தரை மட்ட நீர்த்தேக்க தொட்டி அமைத்து தண்ணீர் வசதி செய்திட ரூ.13.50 இலட்சம் மதிப்பிலும், அடிப்படை வசதிகள் மேற்கொள்வதற்கு ரூ.26 இலட்சம் மதிப்பிலான பணிகள் நடைபெறவுள்ளது.

தெற்குகள்ளிகுளம் ஊராட்சி அதிசய பனிமயமாதா திருத்தலத்தில் ஆண்கள் சுகாதார வளாகம் அமைக்க ரூ.8 இலட்சம் மதிப்பிலும் மற்றும் பெண்கள் சுகாதார வளாகம் அமைக்க ரூ.8 இலட்சம் மதிப்பிலும், ஆழ்குழாய் கிணறு அமைத்து புதிய தரை மட்ட நீர்த்தேக்க தொட்டி அமைத்து தண்ணீர் வசதி செய்திட ரூ.12 இலட்சம் மதிப்பிலும், அடிப்படை வசதிகள் மேற்கொள்வதற்கு ரூ.28 இலட்சம் மதிப்பிலான பணிகள் நடைபெறவுள்ளது.

மேலும், உவரி கப்பல் மாதா கோவில் முதல் அந்தோணியார் கோவில் தார்சாலை அமைப்பதற்கு ரூ.39.80 இலட்சம் மதிப்பிலும், அதிசய பனிமயமாதா கோவிலைச் சுற்றி தார்சாலை அமைக்க ரூ.31.58 இலட்சம் மதிப்பிலும், அதிசய பனிமயமாதா நகரில் தார்சாலை அமைக்க ரூ.21.01 இலட்சம் மதிப்பிலான சாலை வசதிகள் செய்வதற்கான பணிகள் விரைவில் துவங்கப்படும். இப்பணிகள் அனைத்தும் முடிவுற்ற பின்னர் சிறந்த ஆன்மீக சுற்றுலாத்தளமாக மாறும். அதிகளவில் சுற்றுலாப் பயணிகள் வருகைபுரிவதால் பொருளாதாரம் உயர்ந்திடும். பணிகள் அனைத்தையும் விரைந்து முடிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், சேரன்மகாதேவி சார் ஆட்சியர் திரு.ஆகாஷ்,இ.ஆ.ப., சுற்றுலா அலுவலர் திரு. நெல்சன், இராதாபுரம் வட்டாட்சியர் திரு.புகாரி, வட்டார வளர்ச்சி அலுவலர் திரு.ஸ்ரீநிவாச சுடலைமுத்து, திருமதி.பிளாரன்ஸ் விமலா, ஊரக வளர்ச்சி முகமை உதவி செயற்பொறியாளர் திரு.சுப்பிரமணியன், உதவி பொறியாளர்கள் திரு.நாதன், திரு.பிரவின், திரு.சிவபிரகாஷ் மற்றும் அலுவலர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

வெளியிடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.